**மின்சாரத்தை அதிக விலை கொடுத்து வாங்கி பன்னாட்டு நிறுவனங்கள் உள்பட உயரழுத்த மின் நுகர்வோர்களுக்கு குறைந்த விலைக்கு விற்பதால் ஏற்படும் இழப்பு விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | 2010 - 2011 ஆம் ஆண்டில் உயர் அழுத்த மின் நுகர்வோர்களின் மொத்த மின் நுகர்வு | = | 20,623 mu |
| 2. | உயர் அழுத்த மின் நுகர்வோர்களுக்கு வாரியம் நிர்ணயித்துள்ள மின்சார கட்டணம் | = | ரூ. 4.50 |
| 3. | 2010 - 2011 ஆம் ஆண்டில் உயர் அழுத்த மின் நுகர்வோர்களிடமிருந்து வாரியத்திற்கு மின் கட்டணமாக வசூலானத் தொகை | = | ரூ. 9,280 கோடி |

**20,623 மில்லியன் யூனிட் மின்சாரம் இதர நிறுவனங்களிடமிருந்து வாங்க வாரியம் செலவிடும் தொகை விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | வெளி ஆதரங்களிலிருந்து மின்சாரம் வாங்குவதற்கு சராசரி 1 யூனிட்டிற்கு செலவிடும் தொகை | = | ரூ. 9/- |
| 2. | 20623 மில்லியன் யூனிட் மின்சாரம் வாங்க செலவிட்ட தொகை | = | ரூ. 18,650 கோடி |
| 3. | மின்நுகர்வோரிடமிருந்து மின் கட்டணமாக வசூலான தொகை | = | ரூ. 9,280 கோடி |
| 4. | வாரியத்திற்கு ஏற்ற இழப்பீடு | = | ரூ. 9,370 கோடி |

## இலவச மின்சாரம் வழங்கும் வகையில் ஏற்படும் இழப்பு

தமிழகஅரசின் கொள்கையின்படி தமிழக விவசாயிகளுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் இலவச மின்சாரம் வழங்குகிறது. இலவச மின்சாரம் வழங்கிய வகையில் தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க வேண்டிய மானியம்.

**2008 - 2009 ஆம் ஆண்டிற்கு**

| | | |
|---|---|---|
| அரசு வழங்க வேண்டிய மானியம் | ரூ. | 4,118 கோடி |
| அரசு வழங்கியது | ரூ. | 263 கோடி |

**2009 - 2010 ஆம் ஆண்டிற்கு**

| | | |
|---|---|---|
| அரசு வழங்க வேண்டிய மானியம் | ரூ. | 5,828 கோடி |
| அரசு வழங்கியது | ரூ. | 267 கோடி |

## மின்சார உற்பத்தி, மின்நுகர்வோர், மற்றும் மின்உற்பத்திக்கான கடந்த 15 ஆண்டு காலத்திற்கான விவரங்கள்

| வரிசை எண் | வருடம் | மின்நுகர்வோர் எண்ணிக்கை லட்சத்தில் | நிறுவுத்திறன் மெகாவாட் | கூடுதல் மின்சார உற்பத்திக்கான விவரம் (மெகாவாட்) | பற்றாக்குறை (மெகாவாட்) |
|---|---|---|---|---|---|
| 1. | 1996 | 108 | 6908 | 195 | 100 |
| 2. | 1997 | 112 | 6908 | - | 150 |
| 3. | 1998 | 119 | 6916 | - | 200 |
| 4. | 1999 | 124 | 7120 | 36 | 250 |
| 5. | 2000 | 133 | 7203 | 547 | 300 |
| 6. | 2001 | 143 | 7493 | 444 | 500 |
| 7. | 2002 | 150 | 7513 | 334 | 600 |
| 8. | 2003 | 158 | 8249 | - | 600 |
| 9. | 2004 | 163 | 9299 | 336 | 800 |
| 10. | 2005 | 170 | 9512 | - | 1000 |
| 11. | 2006 | 178 | 10011 | - | 1200 |
| 12. | 2007 | 185 | 10098 | 186 | 1400 |
| 13. | 2008 | 194 | 10122 | 600 | 1700 |
| 14. | 2009 | 203 | 10214 | 8027 | 1800 |
| 15. | 2010 | 212 | 10214 | 4400 | 2000 |

நாள்:- 27.12.2011

பெறுநர்,

**தலைவர்,**
தமிழ்நாடு மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையம்,
பாந்தியன் சாலை,
எழும்பூர் - 600 008.

அய்யா,

பொருள் : **தமிழ்நாடு மின் வாரியம், மின் கட்டண உயர்வுக்கு கோரியுள்ள அனுமதியை முற்றிலுமாக நிராகரிக்க வேண்டும் - மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையத்திற்கு வேண்டுகோள் - சம்மந்தமாக...**

பார்வை : **பொது அறிவிப்புகள் 02.11.2011.**

தமிழகத்தில் மின் நுகர்வோர் எண்ணிக்கையும், மின்சார தேவையும் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. 1996 ஆம் ஆண்டு 108 லட்சமாக இருந்த மின் நுகர்வோர்கள் எண்ணிக்கை 2010ல் 212 லட்சமாக அதிகரித்துள்ளது. இதோடு சேர்ந்து மின்சாரத்தேவையும் அதிகரித்து வருகின்றது.

தமிழ்நாடு மின்சார வாரியம், மின் நுகர்வோர்கள் 75 காசு, 85 காசு மின்சார கட்டணத்தை செலுத்தியவர்கள், இன்றைக்கு குறைந்தபட்சம் 2 ரூபாய் செலுத்த வேண்டும் என்றும் இதுவரை மின் நுகர்வோர்கள் 5 படிகளாக பிரித்து மின்சார கட்டணத்தை செலுத்தியவர்கள், 3 படிகளாக மாற்றப்பட்டும். 600 யூனிட் வரை மின்சாரத்தை நுகர்ந்தவர்களுக்கு மின் கட்டணத்தை செலுத்துவதில் மான்யம் என்று இருந்ததை 500 யூனிட்டுகளாக குறைத்தும் 600 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரத்தை நுகர்ந்தவர்களுக்கு ரூ.1,100/- ஐ மின் கட்டணமாக செலுத்தியவர்கள் கட்டண உயர்வுக்கு பின்னர் ரூ.2,375/- ஐ மின் கட்டணமாக செலுத்த வேண்டி அதிரடி உயர்வை அறிவித்து, மின்வாரியத்திற்கு ரூ.8,200/- கோடி ஐ நிதியாக திரட்ட மின் கட்டண உயர்வை அனுமதிக்க மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையத்தை அனுகியுள்ளதை ஏற்று மின் கட்டணம் உயர்த்தப்பட்டால் ஏழை எளிய நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியம் மாநில அரசின் பொதுத்துறை என்ற அடிப்படையில் சேவைத்துறையாக செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட அதிகரித்து வரும் மின் தேவையை கணக்கில் கொண்டு மாநில அரசு மின் உற்பத்திக்கு திட்டமிட வேண்டியது அவசியமாகும். கடந்த 15 ஆண்டுகால (1996-2010) அனுபவத்தை பரிசீலித்தால்

தேவைக்கேற்ப மின்உற்பத்திக்கு திட்டமிடாததும், இதனால் ஏற்படும் மின் பற்றாக்குறையை போக்க தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து கூடுதல் விலைக்கு மின்சாரத்தை வாங்கியதும் தான் மின்வாரிய நிதிப்பற்றாக்குறைக்கு காரணமாக அமைந்துள்ளது. இவைகளை எல்லாம் பரிசீலிக்காமல் மின் கட்டணத்தை 100 சதவீதத்திலிருந்து 200 சதவீதம் வரை உயர்த்திட வேண்டுமென மின்வாரியம் ஒழுங்குமுறை ஆணையத்திற்கு மனு செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல.

மின்சார வாரியத்திற்கு ரூ.42,175 கோடி நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டு இருப்பது உத்தேச மின் கட்டண உயர்வுக்கு காரணம் என மின்வாரியம்கூறுகிறது. மேலும் இந்த பற்றாக்குறை அடுத்த ஆண்டு ரூ.53.000/- கோடியாக உயருமென கூறுகிறது.

மின் பற்றாக்குறைக்கும், மின் வாரியத்திற்கு நிதி பற்றாக்குறையும் நுகர்வோர்கள் காரணம் அல்ல. மின் பற்றாக்குறைக்கும், நிதிப்பற்றாக்குறைக்கும் கடந்த 15 ஆண்டுகாலமாக ஆட்சிப் பொறுப்பில் இருந்த அரசுகள் தான் காரணம்.

## அதிகரித்து வரும் மின் தேவையும், மின் பற்றாக்குறையும்

மின்சார உற்பத்தி, மின்நுகர்வோர், மற்றும் மின்உற்பத்திக்கான கடந்த 15 ஆண்டு காலத்திற்கான விவரங்கள்

| வரிசை எண் | வருடம் | மின்நுகர்வோர் எண்ணிக்கை லட்சத்தில் | நிறுவுத்திறன் மெகாவாட் | கூடுதல் மின்சார உற்பத்திக்கான விவரம் (மெகாவாட்) | பற்றாக்குறை (மெகாவாட்) |
|---|---|---|---|---|---|
| 1. | 1996 | 108 | 6908 | 195 | 100 |
| 2. | 1997 | 112 | 6908 | - | 150 |
| 3. | 1998 | 119 | 6916 | - | 200 |
| 4. | 1999 | 124 | 7120 | 36 | 250 |
| 5. | 2000 | 133 | 7203 | 547 | 300 |
| 6. | 2001 | 143 | 7493 | 444 | 500 |
| 7. | 2002 | 150 | 7513 | 334 | 600 |
| 8. | 2003 | 158 | 8249 | - | 600 |
| 9. | 2004 | 163 | 9299 | 336 | 800 |
| 10. | 2005 | 170 | 9512 | - | 1000 |
| 11. | 2006 | 178 | 10011 | - | 1200 |
| 12. | 2007 | 185 | 10098 | 186 | 1400 |
| 13. | 2008 | 194 | 10122 | 600 | 1700 |
| 14. | 2009 | 203 | 10214 | 8027 | 1800 |
| 15. | 2010 | 212 | 10214 | 4400 | 2000 |

1996 ஆம் ஆண்டு தமிழக மின்வாரியத்தின் மின் நிறுவுத் திறன் 6,908 மெகாவாட் ஆக இருந்தபோது மின் பற்றாக்குறை 100 மெகாவாட். 1996 ஆம் ஆண்டு கூடுதல் மின் உற்பத்திக்கு திட்டமிடப்பட்டாலும், அடுத்த 4 ஆண்டுகளில் திட்டம் அமலாக்கப்படவில்லை. ஆனால் ஆண்டுதோறும் தேவை அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது.

2000 ஆம் ஆண்டில் மொத்த மின் உற்பத்தி நிறுவுதிறன் 7,750 மெகாவாட்டாக இருந்த போது, மின்சார தேவை என்பது 8,050 மெகாவாட்டாக அதிகரித்தது. 1996ல் 100 மெகாவாட் பற்றாக்குறையாக இருந்தது, 2000ல் 300 மெகாவாட்டாக பற்றாக்குறை அதிகரித்துவிட்டது. இதை போன்று கடந்த 15 ஆண்டுகளில் மாநிலத்தை ஆண்ட மூன்று அரசுகளும் மின் தேவைகேற்ப கூடுதல் மின் உற்பத்திக்கு திட்டமிடாததும், திட்டமிட்டதை குறிப்பிட்ட காலத்தில் அமலாக்காததுமே 2010ல் 2000 மெகாவாட் பற்றாக்குறையாக உள்ளது. இன்றலவும் இந்த பற்றாக்குறை நீடிக்கின்றது.

## மின்பற்றாக்குறைக்கும், நிதிப்பற்றாக்குறைக்கும் காரணம் யார்?

நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு மின்சாரம் யூனிட் ரூ.4.50 காசு என நிர்ணயித்து வசூலிக்கிறது. மின்பற்றாக்குறை உள்ளபோது தனியார் மின் நிறுவனங்களிடமிருந்து, அதாவது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள காயங்குளம் மின் நிலையத்திலிருந்து மின்சார வாரியம் யூனிட் ஒன்றுக்கு ரூ.9.40 காசுக்கும் மேலும் சில தனியார் நிறுவனங்களிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.15, ரூ.17 வரை செலுத்தி மின்சாரத்தை வாங்கி, நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களுக்கு சலுகை விலையில் மின்சாரம் வழங்குவதால் வாரியத்திற்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. வேறு வகையில் சொன்னால் நடுத்தர மற்றும் உள்நாட்டு நிறுவனங்களுக்கு வாரியம் மானியம் அளிப்பது வாரிய நிதிப்பற்றாக்குறைக்கு ஒரு காரணமாக உள்ளது. உதாரணமாக

மின்சாரத்தை அதிக விலை கொடுத்து வாங்கி பன்னாட்டு நிறுவனங்கள் உள்பட உயரழுத்த மின் நுகர்வோர்களுக்கு குறைந்த விலைக்கு விற்பதால் ஏற்படும் இழப்பு விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 2010 - 2011 ஆம் ஆண்டில் உயர் அழுத்த மின் நுகர்வோர்களின் மொத்த மின் நுகர்வு | = | 20,623 mu |
| 2. | உயர் அழுத்த மின் நுகர்வோர்களுக்கு வாரியம் நிர்ணயித்துள்ள மின்சார கட்டணம் | = | ரூ. 4.50 |
| 3. | 2010 - 2011 ஆம் ஆண்டில் உயர் அழுத்த மின் நுகர்வோர்களிடமிருந்து வாரியத்திற்கு மின் கட்டணமாக வசூலானத் தொகை | = | ரூ. 9,280 கோடி |

20,623 மில்லியன் யூனிட் மின்சாரம் இதர நிறுவனங்களிடமிருந்து வாங்க வாரியம் செலவிடும் தொகை விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | வெளி ஆதரங்களிலிருந்து மின்சாரம் வாங்குவதற்கு சராசரி 1 யூனிட்டிற்கு செலவிடும் தொகை | = | ரூ. 9/- |
| 2. | 20623 மில்லியன் யூனிட் மின்சாரம் வாங்க செலவிட்ட தொகை | = | ரூ. 18,650 கோடி |
| 3. | மின்நுகர்வோரிடமிருந்து மின் கட்டணமாக வசூலான தொகை | = | ரூ. 9,280 கோடி |
| 4. | வாரியத்திற்கு ஏற்ற இழப்பீடு | = | ரூ. 9,370 கோடி |

மேற்கண்ட விவரத்திலிருந்து வாரியத்திற்கு ரூ.9,320 கோடி நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை அரசு ஈடுசெய்யாத போது நிதிப்பற்றாக்குறை ஏற்படுகிறது.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவது வரவேற்கத்தக்கது. அதனால் வாரியத்திற்கு ஏற்படும் வருமான இடைவெளியை அரசு மானியத்தொகையாக வாரியத்திற்கு முழுமையாக வழங்காததாலும் நிதிப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. இலவச மின்சாரம் என்ற கொள்கையை வகுத்திட்ட மாநில அரசு தான் மின் வாரியத்திற்கு ஏற்படும் நிதிப்பற்றாக்குறைக்கு பொறுப்பேற்க வேண்டும்.

**இலவச மின்சாரம் வழங்குவதை அரசு ஈடுசெய்ய வேண்டும்**

தமிழகஅரசின் கொள்கையின்படி தமிழக விவசாயிகளுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் இலவச மின்சாரம் வழங்குகிறது. இலவச மின்சாரம் வழங்கிய வகையில் தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க வேண்டிய மானியம்.

**2008 - 2009 ஆம் ஆண்டிற்கு**

| | | |
|---|---|---|
| அரசு வழங்க வேண்டிய மானியம் | ரூ. | 4,118 கோடி |
| அரசு வழங்கியது | ரூ. | 263 கோடி |

**2009 - 2010 ஆம் ஆண்டிற்கு**

| | | |
|---|---|---|
| அரசு வழங்க வேண்டிய மானியம் | ரூ. | 5,828 கோடி |
| அரசு வழங்கியது | ரூ. | 267 கோடி |

தேவைகேற்ப மின் உற்பத்தி செய்யாமல் கூடுதலான விலைக்க தனியாரிடம் மின்வாரியம் மின்சாரம் வாங்குவதால் ஏற்படும் நிதிப்பற்றாக்குறைக்கு மின் நுகர்வோர்கள் பொறுப்பாக முடியாது. எனவே நடுத்தர உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு மின்சாரம் வழங்குவதால் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையையும், விவசாயிகள் மற்றும் குடிசைகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்திற்கு உண்டான தொகையை ஈடுசெய்யாததனாலும் ஏற்படும் நிதிப்பற்றாக்குறைக்கு ஏழை, எளிய, நடுத்தர மின் நுகர்வோர்களை மின்வாரியம் தண்டிக்கக் கூடாது.

மின்சார திருட்டு, இழப்பை கட்டுப்படுத்துவதின் மூலம் பல கோடி ரூபாய் வருமானமாக வரும். கம்பியிழப்பை 17.9% லிருந்து 15% ஆக குறைத்திட மின் வாரியம் ஒழுங்குமுறை ஆணையத்திற்கு வேறுஒரு மனுவில் குறிப்பிட்டுள்ளது. அதற்கான ஆக்கபூர்வமான ஏற்பாட்டைச் செய்தாலே 3% மின்சாரம் நமக்கு சேமிப்பாகும். இதனால் வெளிமாநிலங்களில் இருந்து மின்சாரம் கூடுதல் விலை கொடுத்து வாங்குவது தவிர்க்கப்படும்.

வாரியத்தின் வருவாயை உறுதிப்படுத்துகின்ற வகையில் தரமான மின் அளவிகளை (மீட்டர்) தேவையான அளவிற்கு பிரிவு அலுவலகங்களுக்கு கிடைக்கச்செய்ய வேண்டும். அதேபோல் வாரியத்தின் பணிகளை அவ்வப்போது கவனிக்க தேவையான மனித உழைப்பை உறுதிசெய்ய வேண்டும்.

நிலக்கரி கூடுதல் விலை கொடுத்து 20 லட்சம் டன் வரை இறக்குமதி செய்கின்றோம். நமது உள்நாட்டு நிலக்கரி ரூ.500 ஆக இருக்கும். ரூபாய் எட்டாயிரம் விலை கொடுத்து வாங்குவதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த வகையில் செலவினங்களை குறைத்து நிர்வாக திறமையை அதிகரிப்பதின் மூலம் வாரியத்தில் ஏற்பட்டுள்ள நிதி இழப்பை சரிசெய்ய இயலும்.

தமிழகத்தில் தற்சமயம் ஏற்பட்டுள்ள கட்டுக்கடங்கா விலைவாசி ஏற்றம், அத்யாவசிய பொருட்களின் விலை உயர்ந்து நிற்கின்ற நிலை, மின்பற்றாக்குறையும், மின்வெட்டும் தமிழக மக்களை வாட்டி வதைத்துக்கொண்டுள்ள இச்சூழ்நிலையில், இந்த மின்கட்டண உயர்வு ஏழை, எளிய நடுத்தர மக்கள் மற்றும் சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு கூடுதல் சுமையாக மாறிவிடும்.

இந்த சூழ்நிலையில் மின்சார வாரியம் உத்தேசித்துள்ள மின் கட்டண உயர்வு என்பது தமிழக மக்களுக்கு கூடுதலான சுமையாக அமைந்துவிடும் என்பதால் தமிழக மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் கட்டண உயர்வுக்கு அனுமதி அளிப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

தங்களின் உண்மையுள்ள,

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச்செயலாளர்.

பெறுநர்,
**தலைவர்,**
தமிழ்நாடு மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையம்,
பாந்தியன் சாலை,
எழும்பூர் - 600 008.

அய்யா,

பொருள் : தமிழ்நாடு மின் வாரியம், மின் கட்டண உயர்வுக்கு கோரியுள்ள அனுமதியை முற்றிலுமாக நிராகரிக்க வேண்டும் - மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையத்திற்கு வேண்டுகோள் - சம்மந்தமாக...
பார்வை : பொது அறிவிப்புகள் 02.11.2011.

மின்துறை, மாநில அரசின் பொதுத் துறை, மக்களுக்கான சேவைத்துறை, 2 கோடி மின் நுகர்வோர்களின் நலன்களை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டிய துறை. மின்சாரத்துறை ஆடம்பர பொருளாக கொள்ளாமல், அத்தியாவசிய பொருளாக கணக்கில் கொண்டு அனைவருக்கும் அவர்கள் செலுத்தும் தகுதி அடிப்படையில் மின்சாரத்தை வழங்குவது அரசின் கடமை. இவைகளை எல்லாம் கணக்கில் கொள்ளாமல் 110 சதவீத அளவிற்கு மின் கட்டணத்தை உயர்த்த ஒழுங்குமுறை ஆணையத்தை மின்சார வாரியம் அனுகி உள்ளதை முழுவதுமாக நிராகரிக்க வேண்டுமென மின் ஊழியர் மத்திய அமைப்பு கேட்டுக்கொள்கிறது.

தமிழ்நாடு மின்சார வாரியம், மின் நுகர்வோர்கள் 75 காசு, 85 காசு மின்சார கட்டணத்தை செலுத்தியவர்கள், இன்றைக்கு குறைந்தபட்சம் 2 ரூபாய் செலுத்த வேண்டும் என்றும் இதுவரை மின் நுகர்வோர்கள் 5 படிகளாக பிரித்து மின்சார கட்டணத்தை செலுத்தியவர்கள், 3 படிகளாக மாற்றப்பட்டும். 600 யூனிட் வரை மின்சாரத்தை நுகர்ந்தவர்களுக்கு மின் கட்டணத்தை செலுத்துவதில் மான்யம் என்று இருந்ததை 500 யூனிட்டுகளாக குறைத்தும் 600 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரத்தை நுகர்ந்தவர்களுக்கு ரூ.1,100/- ஐ மின் கட்டணமாக செலுத்தியவர்கள் கட்டண உயர்வுக்கு பின்னர் ரூ.2,375/- ஐ மின் கட்டணமாக செலுத்த வேண்டி அதிரடி உயர்வை அறிவித்து, மின்வாரியத்திற்கு ரூ.8,200/- கோடி ஐ நிதியாக திரட்ட மின் கட்டண உயர்வை அனுமதிக்க மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையத்தை அனுகியுள்ளதை முழுவதுமாக நிராகரிக்க வேண்டுமென மின் ஊழியர் மத்திய அமைப்பு வேண்டிக்கொள்கிறது.

## தமிழ்நாடு மின்சார வாரியம் உத்தேசித்துள்ள மின் கட்டண உயர்வுக்கு கீழ்காணும் காரணங்களை முன்வைத்துள்ளதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்

1. மின்சார வாரியம் ரூ.42,175/- கோடி கடன் வலையில் சிக்கியுள்ளது என்றும், அது இந்த ஆண்டு ரூ.53,000/- கோடியாக மாற உள்ளது.

2. தனியார், வெளி மாநிலங்களிலிருந்து கூடுதல் விலைக்கு மின்சாரத்தை வாங்குவது என்பதாகும்.

- தமிழக அரசின் வேண்டுகோளாக மின் கட்டணம் உயர்த்தப்பட வேண்டும் என்ற ஆலோசனையும் மின் வாரியத்திடம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் கொள்கை முடிவின் காரணமாக கடந்த 10 ஆண்டுகளாக தமிழகத்தில் உயர்ந்துவரும் மின் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப மின் உற்பத்திக்கு திட்டமிடவில்லை. மின் தொகுப்புக்கு வருகின்ற மின்சாரத்தை மின் நுகர்வோர்களுக்கு சீரான பகிர்வில்லை. பன்னாட்டு நிறுவனங்களுக்கு தடையின்றி மின்சாரம் வழங்கியது. இவைகளை ஈடுசெய்ய அநியாய விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கியதால் தான் இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த இழப்பிற்கு ஆளுகின்ற அரசு பொறுப்பேற்று மின் வாரியத்திற்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை தீர்க்கின்ற வகையில் மீட்சிநிதி (Bail Out Packege) வழங்க வேண்டும். இது அல்லாமல் மின் கட்டணம் என்ற பெயரால் சாதாரண மக்கள் மீது பொருளாதார தாக்குதலை தொடுக்கக் கூடாது என மத்திய அமைப்பு குறிப்பிட விரும்புகிறது.

- 2003-2004 ஆம் ஆண்டுகளில் மின் கட்டணத்தை உயர்த்தாமல் போனாலும், வீடு, விவசாயம், தொழிற்சாலைகளில் மின் இணைப்பு கொடுப்பதற்கு விசை சக்தியை அதிகப்படுத்துவதற்கு விரிவாக்கம் போன்றவைகளுக்கு மின் நுகர்வோர்கள் செலுத்தும் பாதுகாப்பு பிணையத்தொகை பல மடங்கு உயர்த்தி கணிசமான வருவாயை மின் வாரியம் கூடுதலாக்கி உள்ளதை ஒழுங்குமுறை ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

- 2009-2010 ஆம் ஆண்டுகளில் மின் கட்டணத்தை உயர்த்திய போதும் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்பை காரணம் காட்டி ஒரு வருடத்திற்கு ரூ.1,920 கோடியும், 2013 ஆம் ஆண்டு வரை ரூ.6,429/- கோடியை திரட்ட வழிவகை செய்யும் அளவிற்குதான் மின்சார கட்டண உயர்வை அறிவித்தார்கள். ஆனால் 2010-2011 ஆம் ஆண்டுகளில் ஆலோசித்துள்ள மின் கட்டண உயர்வு மூலம் ஒராண்டுக்கு ரூ.8,200 கோடியை மின் கட்டண உயர்வாக சாதாரண மக்கள் மீது திணிக்க ஆலோசித்துள்ளது.

- மின்சார வாரியத்திற்கு சென்றாண்டு வருவாய் இழப்பு ரூ.42,175 கோடி என்றும், இந்த ஆண்டு அது ரூ.53,000 கோடியாக மாறிட உள்ளது என்றும், அதை ஈடுகட்டுவதற்கே மின் கட்டண உயர்வு என்றும் வாரியம் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது. மின் வாரியத்தின் வரவு, செலவு கணக்கு புள்ளி விவரங்களை பார்க்கும் போது, அரசின் கொள்கையாக இலவசம், மான்யம் என்று அறிவிப்பதற்கு இணையான இழப்பீட்டுத் தொகையை தமிழக அரசு மின் வாரியத்திற்கு முழுமையாக செலுத்தவில்லை, அதனாலேயே இந்த வருமான இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்பதை குறிப்பிட விரும்புகின்றோம். அதாவது தமிழக அரசின் கொள்கை முடிவின்படி 19 லட்சம் விவசாய மின் இணைப்புகளுக்கும், 14 லட்சம் குடிசை மின் இணைப்புகளுக்கும், விசைத்தறி, நெசவு, ஆலயங்கள் ஆகிய இணைப்புகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது.

- இலவசங்களுக்கு ஈடாக அரசு 2008, 2009 ஆம் ஆண்டுகளில் ரூ.4,118 கோடி ரூபாயை மானியமாக அளித்திருக்க வேண்டும். ஆனால் அரசு வழங்கியதோ வெறும் ரூ.263 கோடி மட்டுமே, அதுபோல் 2009-2010 ஆம் ஆண்டுகளில் அரசு வழங்க வேண்டிய மான்யதொகை ரூ.5,858 கோடி, அரசு வழங்கியதோ வெறும் ரூ.267 கோடி மட்டுமே. பொதுவாக மின்சார வாரியத்தின் மின் ஆதாரத்தில் 25 சதவீதம் விவசாய மின் இணைப்புகளுக்கு இலவசமாக அளிக்கப்படுகிறது.

- சமீபத்தில்கூட மின்சார வாரியம் ஒழுங்குமுறை ஆணையத்திற்கு அளித்துள்ள மின் கட்டண **உயர்வு மனுவில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் இலவச மின்சாரத்திற்கு ஈடாக அரசு அளிக்கும் மான்ய தொகை ரூ.2,500 கோடியாக இருக்க வேண்டும் என்று தமிழக மின்சார வாரியம் கேட்டுள்ளதை ஒழுங்குமுறை ஆணையமும் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை பார்க்கும்போது கடந்த 10 ஆண்களாக விவசாயிகள் மற்றும் இதரர்களுக்கு அளிக்கப்படும் இலவசம், மான்யங்களுக்குண்டான தொகையை அரசு முழுமையாக வாரியத்திற்கு அளித்திருந்தாலே மின் வாரியத்திற்கு வருவாய் இடைவெளி என்பது ஏற்பட்டிருக்காது.** 2009 ஆம் ஆண்டில் மின் கட்டண உயர்விற்காக மின் வாரியத்திடம் அளிக்கப்பட்ட உண்மையான வருவாய் அறிக்கையின் மீது தமிழ்நாடு மின் துறை ஆணையம் அளித்த தீர்ப்பில், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கும் ஆந்திரா, பஞ்சாப் மாநிலங்களில் முறையே ரூ.3,665 கோடி, ரூ.2,565 கோடி அளிக்கப்பட்டுள்ளது போன்று தமிழகத்தில் ஏன் அளிக்கவில்லை என்று மின் துறை ஒழுங்குமுறை ஆணையம் கேள்வி கேட்காமல் மேம்போக்காக இருப்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம். இந்த மின்கட்டண உயர்வும் அவசியம் அற்ற ஒன்று என்பதை மின் ஊழியர் மத்திய அமைப்பு கோடிட்டு காட்ட விரும்புகிறது.

- மின் வாரியத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுசெய்ய ஏழு தனியார் மின் நிறுவனங்களிடமிருந்து மின்சாரம் பெறுவதற்கு வாரியம் நிர்ணயித்துள்ள அநியாயமான கட்டண ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென தொடர்ந்து மின் ஊழியர் மத்திய அமைப்பு வலியுறுத்தி வருகிறது. அதாவது மின் வாரியத்தின் மொத்த உற்பத்தியில் **தனியாரின் பங்கு 11 சதவீதம் மட்டுமே. ஆனால் வாரியத்தின் மொத்த வருமானத்தில் 30 சதவீதத்தை இந்த ஏழு தனியார் மின் நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தை வாங்குவதற்கான தொகையை செலவு செய்கின்றது.** பொதுத்துறை மின்சாரத் துறையின் மூலமாக மக்களது பணத்தை தனியார்கள் கொள்ளை அடிப்பதை தடுத்து நிறுத்தும் முகமாகத்தான் போட்ட

ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும். மின் வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை குறைக்க வேண்டுமென்று மத்திய அமைப்பு வலியுறுத்துகிறது. **ஆந்திர மாநிலத்தில் தனியார் நிறுவனங்களிடம் மின்சாரத்தை பெறுவதற்காக போடப்பட்ட ஒப்பந்தங்கள் மறு பரிசீலனை செய்யப்பட்டு மின்சார கட்டணம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளதை ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.**

- மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வெகுவாக குறைக்க வேண்டும். அதாவது காயங்குளம் மின் நிலையத்திலிருந்து மின்சார வாரியம் யூனிட் ஒன்றிக்கு ரூ.9.40 காசு செலுத்துகின்றது. மேலும் சில நிறுவனங்களிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.15, ரூ.17 வரை செலுத்தி மின்சாரத்தை பெறுவதனால் தான் தனது வருமானத்தில் 86.64 சதவீதத்தை மின்சாரம் வாங்குவதற்காகவே செலவழிக்கின்றது. அதாவது 31.3.2011 முடிய உள்ள நிதியாண்டில் வாரியத்தின் வருமானமோ ரூ.22,341.25 கோடி, அதில் மின்சாரத்தை வாங்குவதற்கு மட்டும் ரூ.19,356.82 கோடியை செலவு செய்யும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதை குறைத்தாலே மின் வாரியத்தின் இழப்பை ஈடுசெய்ய இயலும் என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

- தமிழக மின்சார வாரியம் மத்திய மாநில அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெற்றுள்ள கடனுக்கு செலுத்துகின்ற வட்டியை குறைப்பது அல்லது தள்ளுபடி செய்வது மூலம் வாரியத்திற்கு தற்சமயம் ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுசெய்ய பேருதவியாக அமையும். அதாவது 2009-2010 ஆம் ஆண்டிற்கு ரூ.3,464.99 கோடியும், 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.4,032.50 கோடியை வட்டியாக செலுத்தியுள்ளதை ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

- மின் வாரியம் கட்டண உயர்வுக்காக ஆணையத்திடம் அளித்துள்ள மனுவில் **வாராக்கடன் என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் வாராக்கடன் எவ்வளவு, அதை வசூல் செய்வதற்கான நடவடிக்கை என்ன என்பவை போன்றவைகள் மனுவில் குறிப்பிடப்படவில்லை.** வாராக்கடன் எவ்வளவு என்பதை ஆணையம் கேட்டு அதை வசூலிப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாயின் நிதி இழப்பீட்டு சுமையை குறைக்க வாய்ப்புண்டு என்பதையும் வாரியத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

- ஸ்தல ஸ்தாபனங்கள் பாக்கி வைத்துள்ள மின் கட்டணத்தை வசூலிப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேண்டும். 31.3.2009 முடிய ரூ.150.47 கோடி பாக்கி வைத்துள்ளதாக வாரியம் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது என்பதையும் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

- மின்சார திருட்டு, இழப்பை கட்டுப்படுத்துவதின் மூலம் பல கோடி ரூபாய் வருமானமாக வரும். கம்பியிழப்பை 17.9% லிருந்து 15% ஆக குறைத்திட மின் வாரியம் ஒழுங்குமுறை ஆணையத்திற்கு வேறுஒரு மனுவில் குறிப்பிட்டுள்ளது. அதற்கான ஆக்கபூர்வமான ஏற்பாட்டைச் செய்தாலே 3% மின்சாரம் நமக்கு சேமிப்பாகும். இதனால் வெளிமாநிலங்களில் இருந்து மின்சாரம் கூடுதல் விலை கொடுத்து வாங்குவது தவிர்க்கப்படும்.

- வாரியத்தின் வருவாயை உறுதிப்படுத்துகின்ற வகையில் தரமான மின் அளவிகளை (மீட்டர்) தேவையான அளவிற்கு பிரிவு அலுவலகங்களுக்கு கிடைக்கச்செய்ய வேண்டும். அதேபோல் வாரியத்தின் பணிகளை அவ்வப்போது கவனிக்க தேவையான மனித உழைப்பை உறுதிசெய்ய வேண்டும்.

- நிலக்கரி கூடுதல் விலை கொடுத்து 20 லட்சம் டன் வரை இறக்குமதி செய்கின்றோம். நமது உள்நாட்டு நிலக்கரி ரூ.500 ஆக இருக்கும். ரூபாய் எட்டாயிரம் விலை கொடுத்து வாங்குவதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

- இந்த வகையில் செலவினங்களை குறைத்து நிர்வாக திறமையை அதிகரிப்பதின் மூலம் வாரியத்தில் ஏற்பட்டுள்ள நிதி இழப்பை சரிசெய்ய இயலும்.

- தமிழகத்தில் தற்சமயம் ஏற்பட்டுள்ள கட்டுக்கடங்கா விலைவாசி ஏற்றம், அத்யாவசிய பொருட்களின்

விலை உயர்ந்து நிற்கின்ற நிலை, மின்பற்றாக்குறையும், மின்வெட்டும் தமிழக மக்களை வாட்டி வதைத்துக்கொண்டுள்ள இச்சூழ்நிலையில், இந்த மின்கட்டண உயர்வில் மேலும் சீரழிந்து போகும் நிலைக்கு தள்ளப்படும்.

2008 ஆம் ஆண்டு சர்வதேசரீதியில் ஏற்பட்டுள்ள நிதிச்சந்தை என்னும் சுனாமி நெருக்கடி இநிதியாவையும், தமிழகத்தையும் தாக்கி பல லட்சக்கணக்கானவர்கள் வேலை இழப்பை எதிர்நோக்கியுள்ள இந்த சூழ்நிலையில் மின்சார வாரியம் உத்தேசித்துள்ள அபரிமிதமான மின் கட்டண உயர்வு தமிழக மக்களின் வாழ்க்கை நிலையை புரட்டிப்போடும் இந்த மின் கட்டண உயர்வுக்கு தமிழக மின்சார ஒழுங்குறை ஆணையம் அனுமதி அளிக்காமல் தமிழக மின்சார வாரியத்தின் மின் கட்டண உயர்வு வேண்டுகோளை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பதுடன், மின் வாரியம் கடனில் இருந்து மீள்வதற்கான எங்களது ஆலோசனை அடிப்படையில் தமிழக அரசு போதுமான நிதி ஆதாரங்களை அளித்திட மின்துறை ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட வேண்டுமென மின் ஊழியர் மத்திய அமைப்பு கேட்டுக்கொள்கிறது.

**தங்கள் உண்மையுள்ள**

**(எஸ். எஸ். சுப்பிரமணியன்)**
**பொதுச்செயலாளர்**